திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, இந்த சித்தேரி ஏரிக்கு எந்தவிதமான வரத்து வாய்க்காலும் இல்லாத காரணத்தினால் எல்லா நேரத்திலும் இந்த சித்தேரி ஏரி நீர்ப்பிடிப்பு இல்லாமல் இருந்து வருகிறது. ஏற்கனவே அங்கே மழை நீரைத் தேக்குகின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அதுவும் இல்லாத நிலையில் அங்குள்ள நிலங்களை பட்டா செய்து கொடுத்துவிடுவதால் எந்தவித நீர்வரத்தும் இல்லாமல் இருக்கிறது. ஏறக்குறைய 100 ஏக்கர் பரப்புள்ள இந்த ஏரி 200 ஏக்கருக்கு மேற்பட்ட 250 ஆயக்கட்டுக்காரர்களை உள்ள டக்கிய இந்தப்பகுதிக்கு மஞ்சினி ஓடையிலிருந்து புதியதாக ஒரு வாய்க்கால் வெட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த கண்மாய்க்கு வசிஷ்ட்டா நதியிலிருந்து காட்டுக்கோட்டை மற்றும் தலைவாசல் ஆகிய இரண்டு அணைகள் மூலமாக தண்ணீர் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதிகாரிகள் கொடுத்த புள்ளி விவரத்தின்படி பார்ப்போமானால் ஒரு வருஷம் தவிர மீதிவருஷம் ஏறக்குறைய 70%, 80% அளவுக்கு அங்கே விவசாயம் நடந்திருக்கிறது. ஓடையிலிருந்து இங்கே தண்ணீர் கொண்டு வருவதென்றால் நடுவிலே 53 அடி அளவிற்கு உயரமான நிலப்பரப்பு இருக்கிறது. அதை வெட்டி கால்வாய் அமைப்பதற்கு மிக அதிகமான பணம் செலவாகும் என்பதால் அதை அரசு ஏற்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு நீர்த்தேக்கம்.

260.—(*வினா எண். 5638) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பெரியகுளம் வட்டம் மஞ்சளாறு நீர்த்தேக்கத்தில் மண்மேடு பரவி நீர் கொள்ளளவு குறைவதைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

டாக்டர் த. முகம்மது சலீம் : தலைவர் அவர்களே, மஞ்சளாறில் உள்ள கேச்மெண்ட் ஏரியா என்று சொல்லக்கூடிய மஞ்சளாறு அணையில் தண்ணீர் தேங்கக்கூடிய இடத்தில் தனியார்கள் நிலப்பரப்பை ஆக்கிரமித்து, அதை தங்களுடைய விவசாயிகளைக் கொண்டு நடத்தி, மேலே இருந்து வருகின்ற தண்ணீரை அணை போட்டு அணைக்கு வராமல் தடுப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், இதுகுறித்து அரசு எந்தவித நடவடிக்கை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சரியாக எழுதி கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கேரள மாநில ஆலடியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

261—(* வினா எண் 13397)—திரு. க. சோலைராசு மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலம், ஆலடியிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) கேரளாவிலிருந்து வேறு திட்டங்கள் மூலம் தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் உண்டா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கேரளா மற்றும் தமிழக மாநிலங்களிடையே ஏற்படுத்தப்பட்ட நதிநீர் உடன்பாட்டில் ஏற்கனவே பெரியார் படுகை இடம் பெற்றுள்ளதால், திரு. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் மத்திய அரசால் நியமிக்கப் பெற்ற தொழில்நுட்பக் குழு 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அளித்த தனது அறிக்கையில் பெரியார் படுகையைச் சேர்த்துக்கொள்ளவில்லை. 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மத்திய பாசனத் துறையால் ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குழுவின் ஆய்வு எல்லைக்கு, கேரளாவிலுள்ள வாமனாபுரம், அச்சன்கோயிலாறு மற்றும் கல்லடா படுகைகள் மட்டுமே உட்படுத்தப்பட்டது. எனவே, பெரியாறு படுகையிலுள்ள உபரி நீரை கேரளாவிலுள்ள ஆலடியிலிருந்து தமிழகத்திற்குக் கொண்டுவரும் இவ்வரசின் செயற்குறிப்பினை இக்குழுவினால் பரிசீலிக்க இயலாது என மத்திய நீர்வளக் குழு தற்பொழுது தெரிவித்ததுள்ளது.

(ஆ) ஆம்.

(முற்பகல் 11-00)

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டம் மட்டும் அரசினுடைய பரிசீலனையிலே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 2-12-1982 அன்று நம்முடைய தமிழக அரசினுடைய ஆணையர் மற்றும் செயலர் மாதவ சர்மா அவர்கள் கேரள அரசு தனிச் செயலர் அவர்களோடு இரு முனைப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும், இத்திட்டத்தை பரிசீலனையில் எடுத்துக்